களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p573-580** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# பெருமாள்முருகனின் படைப்புகளில் விளிம்புநிலை மாந்தர்கள்

Marginalized People in Perumal Murugan's Works

**முனைவர் ம.தமிழ்ச்செல்வி,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி,
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), திருச்சி - 620 002.

**Dr. M. Tamilselvi*,**
*Assistant professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College,*
*(Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-2, Tamil Nadu, India.*
***Email***: *tamilselvim@sigc.edu*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 25-08-2026**
*Corresponding Author Email:
*tamilselvim@sigc.edu*

**Abstract:** In all countries across the world, whoever is marginalized or sidelined across various spheres such as religion, race/ethnicity, language, economy, and education can be termed marginal people. In English, this is referred to as 'subaltern studies'. That is, anyone pushed from the center to the periphery can be included within the definition of marginal people. In this regard, transgender individuals, homosexuals, roadside workers, informal/casual workers, students, women, and children can all be brought under the definition of marginal people. The objective of this study is to focus on and depict the living conditions of people who struggle for their rights and to sustain their existence. Furthermore, this study explains the struggle of people from all walks of life striving to maintain their living conditions, their dignity and desire to break free from it, and their resistance.

**Keywords:** *Marginal people - Concepts of center and margin - Subaltern studies - Liberation of the marginalized - Those who fought for the liberation of the marginalized - Marginal people in Perumal Murugan's works.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

### ஆய்வுச் சுருக்கம்

உலகில் அனைத்து நாடுகளிலும் மதம், இனம், மொழி, பொருளாதாரம், கல்வி ஆகிய அனைத்து நிலைகளிலும் யாரெல்லாம் ஒதுக்கப்படுகிறார்களோ, ஓரங்கட்டப்படுகிறார்களோ, அவர்களை விளிம்புநிலை மாந்தர்கள் என்று கூறலாம். இதனை ஆங்கிலத்தில் 'subaltern studies' என்று குறிப்பிடுவர். அதாவது மையத்திலிருந்து விளிம்பிற்குத் தள்ளப்படுகிறவர்கள் அவர்கள் எல்லோரையும் விளிம்பு நிலை மாந்தர்கள் என்ற வரையறைக்குள் அடக்கலாம். அவ்வகையில் திருநங்கைகள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், சாலையோரப் பணியாளர்கள், உதிரித் தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைவரையும் நாம் விளிம்புநிலை மாந்தர்கள் என்ற வரையறைக்குள் கொண்டுவர இயலும். தங்களுக்கான உரிமைக்காகவும் இருப்பு நிலையை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் போராடும் மாந்தர்களின் வாழ்வியல் சூழலை மையமிட்டு எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும் தங்களின் வாழ்வியல் நிலையை தக்க வைத்துக் கொள்வதற்காக அனைத்து தர மனிதர்களும் போராடும் போராட்ட நிலையையும், அதிலிருந்து விடுபட வேண்டும் என்னும் மாண்பையும், அவர்களின் எதிர்ப்பையும் பற்றி விளக்குவதாக இவ்வாய்வு அமைந்திருக்கிறது.

### திறவுச் சொற்கள்

விளிம்பு நிலை மாந்தர்கள் - மையம் விளிம்பு பற்றி கருத்துக்கள் - விளிம்பு நிலை ஆய்வுகள் - விளிம்பு நிலையினரின் விடுதலை - விளிம்பு நிலையினரின் விடுதலைக்கு போராடியவர்கள் - பெருமாள் முருகனின் படைப்புகளில் விளிம்பு நிலை மாந்தர்கள்.

### முன்னுரை

இந்தியாவில் பல்வேறு விதமான சாதிப் பிரிவுகளில் மக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். பெரும்பான்மையான மக்கள் தங்களுக்கெனத் தனித்த கொள்கைகளை வகுத்துக்கொண்டு, அவற்றின் அடிப்படையில் ஆதிக்க மனப்பான்மையுடன் வாழ்ந்து வருகின்றனர். சிலர் அவர்களுக்கு அடங்கி நடக்கின்ற விளிம்புநிலை மக்களாக இருக்கின்றனர். அந்த மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளுக்குக்கூட நிலக்கிழார்களிடமும், பெருமுதலாளிகளிடமும் கையேந்தி நிற்கின்ற அவலநிலையில் வாழ்கின்றனர். தங்களுடைய உரிமைகளையும் வாழ்க்கைக்கான முன்னேற்றமான வழிகளையும் விட்டுக்கொடுத்து விட்டு வாய்மூடி மௌனிகளாகக் காலத்தை நகர்த்துகின்றனர்.

### விளிம்புநிலை - விளக்கம்

விளிம்பு குறித்துப் பல்வேறு அறிஞர்கள் தங்கள் கருத்துகளைக் கீழ்க்கண்டவாறு வரையறை செய்துள்ளனர்.

> *'விளிம்பு என்பது வர்க்க அடிப்படையிலான வரையறை அல்ல. அது சாதி, பால், அரசியல், பொருளாதாரம் எனப் பல்வேறு கூறுகளால் கீழ்நிலைப்படுத்தப்பட்ட சக்திகளைக் குறிப்பது ஆகும். விளிம்புகள் எப்போதும் ஒரு படித்தானவை அல்ல. மேலும் ஒற்றைக் கருத்தியல் கொண்டவையும் அல்ல. இது ஒரு ஒப்பீட்டான கருத்தாக்கம். ஒரு மையத்திற்கு விளிம்பாக ஒன்று அதனினும் விளிம்புடன் ஒப்பிடும்போது அது மையமாக அமைகின்றது' என்று சுபஜா குறிப்பிடுகிறார்.*[1]

'ஒன்றின் பரப்பு முடியும் இடம் ஓரம். கத்தியின் விளிம்பு வெயிலில் மின்னியது. கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்திருந்தாள். கூரையின் விளிம்பிலிருந்து ஐந்து அடி தள்ளி ஒரு வேப்ப மரம். அவள் துன்பத்தின் விளிம்பிற்கே போய் விட்டாள். நீரில் விழுந்தவன் படகின் விளிம்பைப் பிடித்தபடி மிதந்தான். குடத்தின் விளிம்பு வரை தண்ணீர் இருந்தது' என்று விளிம்பு குறித்த விளக்கத்தைத் தருகின்ற கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 'சமூகத்தின் பொதுவான போக்குகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றிலிருந்து பெரும்பாலோரால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலை margin. தொண்ணூறுகளுக்குப் பின் விளிம்புநிலை (margin) பற்றிய பார்வை தீவிரமடைந்தது' என்று விளக்கம் தருகின்றது.[2]

> *'ஆதிக்க தேசிய சமூகங்களின் ஓரஞ்சாரமான நிலைகளில் வைக்கப்பட்டுள்ள சமூகக் குழுக்களை விளிம்பு நிலையினர் எனலாம். விளிம்புநிலையினர் எனக் குறிப்பிடப்படும் மக்களுக்குச் சமூகப் படிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட எந்த இடமும் கிடையாது' என்று விளிம்புநிலையினரின் அடையாள வெளிப்பாடுகள் என்ற கட்டுரையில் ஆ. செல்லப்பெருமாள் எடுத்துரைக்கின்றார். சமூகத்தில் விளிம்புநிலையினர் (marginals) என்னும் தனித்த பிரிவினரை டர்னர் இனங்காண்கின்றார்.*[4]
>
> *'விளிம்பு மக்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட குழுவின் பேராளர்களாக இருப்பர். அத்தோடு அவர்கள் சமூகம், பண்பாடு நிலைகளில் தனித்தன்மையுடன் விளங்குவர். சில சமயங்களில் ஒரு குழுவினர் மற்றொரு குழுவினருக்கு எதிர்நிலையினராகக்கூட இருப்பர். தாங்கள் தாழ்ந்த பிரிவிலிருந்து தோன்றியவர்கள் என்ற நிலை ஒரு புறமிருக்க, நடைமுறையில் அமைப்புக்கு எதிராக சமூகம் கட்டமைக்கின்ற பண்பைக் கொள்ளும் சுபாவம் கொண்டவர்கள். இவர்கள் அமைப்பு*

> *குறித்து விமர்சனம் செய்பவர்களாகவும் எதிர் அமைப்பைக் கட்டமைத்து மீசமூகம் ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பர்.*

எழுத்தாளர்கள், கலைஞர்கள், தத்துவவாதிகள் ஆகியோர் விளிம்புநிலையினராக அமைகின்றனர் என்று மானிடவியல் கோட்பாடுகள் என்ற நூலில் சீ. பக்தவத்சலபாரதி விளக்கம் தருகின்றார். விளிம்புநிலை மக்கள் என்போர் சமூகத்தின் படிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட எந்த இடமும் இல்லாமல் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் ஆவர். விளிம்புநிலைக் குழு என்பது பெருந்திரள் சமூகத்துடன் ஒத்துப்போகாது சமூகப் பொது ஓட்டத்திற்கு அப்பாற்பட்ட நிலையினது. எடுத்துக்காட்டாக சிறுபான்மை இனக்குழுவினர், பழங்குடியினர், நாடோடிகள், அலிகள், அகதிகள் மற்றும் பெருநகரச் சேரிவாசிகள் போன்றோரைக் குறிப்பிடலாம் என்று கோ. பன்னீர்செல்வம் 'உங்கள் நூலகம்' என்ற இலக்கிய இதழில் கூறுகின்றார்.[5]

1980-ஆம் ஆண்டு ரணஜித்குகா என்பவரால் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு வரலாற்று ஆய்வுமுறையே அடித்தள மக்கள் ஆய்வு என்பர். இதனை விளிம்புநிலை மக்கள் ஆய்வு எனவும் சொல்வர்.

> *'ஆங்கிலத்தில் இதனை Subaltern Studies என்பர். Subaltern என்பதற்குக் கீழ்நிலையாளர்' என்று ஏ. சிதம்பரநாதச் செட்டியார் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் குறிப்பிடுவதாக சுபஜா பின்வருமாறு விளக்கம் தருகின்றார்:*
>
> *விளிம்புநிலை மக்களின் ஆய்வுகள் என்பன, கருத்துருவாக்கப்பட்ட சட்டத்தின் வன்முறைகளை வெளிக்கொணர்வதாகவும், அரசுக்கு எதிரான அடித்தட்டினர் கலகங்கள் அரசியல் நீக்கம் செய்யப்பட்டு அவற்றை மிகவும் துல்லியமாகவும் நுணுக்கமாகவும் வெளிக்கொணர்வதாகவும் அமைந்திருக்கிறது. அரசுக்கு அப்பாற்பட்ட மாற்றுச்சட்ட அமைப்புகள் பற்றிய பார்வைகளை உள்ளடக்கியதாகவும் அமையவேண்டும். தற்காலத்தில் உலகெங்கிலும் இலக்கியக் கருத்தாக்கங்கள் கேள்விக்குள்ளாக்கப்படுவதோடு விளிம்புநிலைக் குரல்கள் மேலெழுத்து வருகின்றன. கலை இலக்கியச் செயல்பாடுகளில் புதிய பரிமாணங்களை விளிம்புநிலை நோக்குகளால் மட்டும் அடைய இயலும் என்ற நிலையைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும் என்ற நூலில் அ. மார்க்ஸ் குறிப்பிடுவதாக சுபஜா குறிப்பிடுகிறார்.*


### மையம் - விளிம்பு பற்றிய கருத்துக்கள்

ஒன்றின் மையம் மற்றொன்றிற்கு விளிம்பாக அமைகின்றது. மையம் - விளிம்பு பற்றிய ஆய்வுகளில் இரு அடிப்படை நோக்குகள் குறித்துத் தெளிவோடு இருக்க வேண்டுவது முக்கியம்.

> *'மையம் - விளிம்பு ஆகிய இச்சொல்லாடல்கள் எவையும் முற்றுமை கொண்டவை அல்ல, சார்புத் தன்மை கொண்டவைகளே என்பது ஒன்று. அதுபோலவே இவைகளுக்கிடையேயான முரண்பாடுகளும் இருக்கின்றன என்பது மற்றொன்று. எடுத்துக்காட்டாக இந்தியத் தேசிய மையம் எனக் கொள்வதானால் இந்தியாவில் உள்ள பிற தேசிய இனங்கள் விளிம்பு. இந்திய மொழி மையம் எனில் பிற தேசிய இனமொழிகள் விளிம்பு. இவ்வாறே இந்து மதம் மையம் எனில் இசுலாம், கிறித்தவம் உள்ளிட்ட பிற மதங்கள் விளிம்பு என இராஜேந்திரசோழன் தமது 'வல்லினம்' என்ற இலக்கிய இதழில் குறிப்பிடுகின்றார். 'இந்தியத் தேசியத்தின் மையப்பகுதியைச் சென்றடைய வேண்டுமெனில் விளிம்புப் பகுதியிலுள்ள மேடுகளை உடைத்துத்தான் ஆக வேண்டும்' என்று இந்தியக் கட்டமைப்பை சமமாக நிலைநிறுத்திட வேண்டும் என்று காந்தி அவர்கள் தமது கருத்தை வலியுறுத்துகிறார்.*[9]

ஏழைகள், தலித்துகள் ஆகியோர் மீது தொடர்ந்தும் அவலநிலை வாழ்வே திணிக்கப்பட்டுவரும் இன்றைய சூழலில் தலித் தலைவர்களைப் போல் சூழலறிவோடு விளிம்புநிலையினரிடமிருந்து வெடித்தெழும் மக்கள் சக்தியை வளர்த்தெடுக்க வேண்டும். விளிம்புநிலையினர் தங்களுடைய ஆட்சி, பணபலம், கல்வி, அதிகாரம், நிர்வாகம் ஆகியவற்றைக் கொண்டு ஆதிக்கச் சாதியினரை எதிர்த்து வெல்ல வேண்டும்.

> *'ஆட்சி, அதிகாரம், நிர்வாகம், பணபலம் ஆகியவற்றைக் கொண்டு விளிம்புகள் மையத்தை எதிர்க்க வேண்டும். நிலையான ஆட்சி என்று மையங்கள் சொன்னால் நியாயமான ஆட்சியா, நீதியான ஆட்சியா என விளிம்புகள் போர்க்குரல் எழுப்ப வேண்டும். வலிமையான ஆட்சி என்று மையங்கள் கர்ஜித்தால் சுதந்திரமான ஆட்சியா என விளிம்புகள் போர்க்குரல் எழுப்ப வேண்டும். இந்த மைய-விளிம்பு மோதல்களால் மையங்கள் வலிமையற்றதாகும். முடிவெடுக்கும் அதிகாரம் மையத்தில் மட்டும் முடங்கிவிடாது; அதிகாரப் பரவல் நிகழும். முடிவு எடுப்பதில் மக்களின் பங்கேற்பு நிகழும்' என்று ஒளி மற்றும் மரி ஆகியோரால் 'தலித் அடையாளத் தேடல்' என்ற நூலில் விளிம்புநிலை மக்களும் உயர்ந்த இடத்தைப் பிடிக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*




*படம் 1: மையம் - விளிம்பு உறவுநிலை*

## விளிம்புநிலை ஆய்வுகள்: வரலாற்றியலின் புதிய போக்குகள்

நீர்மத் தன்மையுடைய சூழலில்தான் விளிம்புநிலை ஆய்வுகள் மேலெழுந்தன. காலனியக் கல்வி முறையுடன் இங்குத் தோற்றுவிக்கப்பட்ட வரலாற்றாய்வு என்பது இங்கிலாந்தில் இருந்ததை இங்குப் பதியம் போடுவதாகவே அமைந்தது. வலதுசாரிக் குழுவும் இடதுசாரிக் குழுவுமாக இங்கு ‘கேம்பிரிட்ஜ் தேசியவாதம்’ என்ற இரண்டு குழுக்கள் கால் கொண்டன. இவ்விரண்டு குழுக்களையும் பற்றி விளிம்புநிலை ஆய்வுகள் நூல் வரிசையின் முதல் தொகுதியில் ரணஜித்குகா குறிப்பிடும்போது, இவ்விரண்டு குழுவினருமே மேட்டிமை வகையைச் சேர்ந்தவர்கள் (elites) என வரையறுக்கின்றார்.

> *‘விளிம்புநிலை ஆய்வுகளுக்கென்று சில பிரகடனங்கள் உண்டு. அவற்றுக்கான நோக்கம் தெளிவானது; மூடி மறைக்கப்பட்டதல்ல. காலனியவாத அறிவுத்துறை போன்று இலைமறை காயாக உள்ளொன்று கொண்டு புறமொன்று வெளிப்படுத்துவதாக அல்லாமல் மிகத் தெளிவாகவே விளிம்புநிலை மக்கள் தங்கள் வரலாற்றைத் தேடும் முகமாக இந்த அறிவியக்கம் தோன்றியது’ என்கிறார் ரணஜித்குகா. இது பற்றிக்*

> *குறிப்பிடும்போது "We are needed opposed to much of the prevailing academic practice in historiography, for its failure to acknowledge the subaltern as the maker of his own destiny. This critique lies at the very heart of our project" என்று குறிப்பிடுகின்றார்.*

விளிம்புநிலை ஆய்வுகள் அடுத்த கட்டமாக உலக வரலாற்றில் சமூக மாற்றத்தின் தன்மைகளை ஆராய முற்பட்டன. குறிப்பாக உலக வரலாற்றை முன்வைத்து இந்தியச் சமூகத்தின் தன்மைகளையும் விளிம்புநிலை மக்களையும் அறிய முற்பட்டன. இந்தியாவில் ஆங்கிலேயக் காலனி ஆட்சி, அதற்குப் பின்னால் விடுதலை பெற்ற இந்தியாவில் ஏற்பட்ட மக்களாட்சி இரண்டும் இந்திய மக்களை முதலாளித்துவ நவீனத்துவம் நோக்கி நகர்த்திய முயற்சியை விளிம்புநிலை ஆய்வுகள் பின்வருமாறு வரையறை செய்கின்றன.

> *'பொது நிலையில் பேசவேண்டுமானால் மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி ஏற்பட்டது எனலாம். தேசியவாத வரலாற்றறிஞர்கள் கூட இத்தகைய நிலையை வரையறுக்கும்போது இந்தியாவானது முதலாளித்துவத்துக்கு முந்தைய (Pre-Capitalist) நிலையில் இருந்து இன்று உலக வரலாற்றுப் பாதையில் மேல்நிலையில் உள்ள முதலாளித்துவம் சார்ந்த நவீனத்துவம் நோக்கி நகர்ந்து செல்கிறது என்றனர். இதற்குக் காலனிய ஆட்சியாளர்களின் வருகையும் அவர்களைத் தொடர்ந்து இந்திய விடுதலைக்குப் பிந்திய சூழலும் காரணம் என்பர்' என்று விளிம்புநிலை ஆய்வுகளின் வரலாறு என்ற கட்டுரையில் சீ. பக்தவத்சலபாரதி சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆவணக் காப்பகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள ஆவணங்களிலிருந்து விவரங்கள் பெறுவதற்கான ஒரு தனித்த வாசிப்பு முறை தேவை என்பதைக் குகா தம் 'காலனிய இந்தியாவில் உழவர் கிளர்ச்சிகளின் அடிப்படை போக்குகள்' என்ற நூலில் வலியுறுத்துகிறார். விளிம்புநிலை மக்கள் குறித்த செய்திகள் நேரடியாக இல்லாத இந்த ஆவணங்களை வாசித்தல் என்பது, இருக்கும் செய்திகளின் பின்னால் உருவகமாகப் புதைந்து கிடக்கும் செய்திகளை ஊகித்தறியும் ஒரு முறையை விளிம்புநிலை ஆய்வாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிறார். வாய்மொழி வழக்காறுகளையும், ஆவணப்படுத்தப்பட்டுள்ள தரவுகளிலிருந்து பூடகமாக மறைந்திருக்கும் செய்திகளை உய்த்துணர்ந்தும் விளிம்புநிலையினர் வரலாறு எழுதப்படவேண்டுமென்கிறார் ரணஜித்குகா.*[12]

1988 என்பது விளிம்புநிலை ஆய்வுகளின் திருப்புமுனை எனலாம். விளிம்புநிலை ஆய்வுகள் நூல்வரிசையைத் தோற்றுவித்தவரான ரணஜித்குகா இவ்வாண்டு அதன் பதிப்புக் குழுவிலிருந்து ஓய்வு

பெற்றுக்கொண்டார். ஆனால் அதே ஆண்டு நியூயார்க்கிலிருந்து தேர்வு செய்யப்பெற்ற 'விளிம்புநிலை ஆய்வுகள்' (Selected Subaltern Studies) எனும் தொகுதி வெளியிடப்பட்டது. இத்தொகுதி விளிம்புநிலை ஆய்வுகள் திட்டத்தின் குறிக்கோளை உலகந் தழுவியதாக்க முனைந்தது.

விளிம்புநிலை ஆய்வுகளில் மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்த முக்கியமான அறிஞர்கள் வருமாறு: சுமித் சர்க்கார், கியான் பிரகாஷ், அஜய் ஷக்காரியா, திபேஷ் சக்ரபர்த்தி, ஷெயில், மாயாராம் கௌதம பத்ரா, டேவிட் அர்னோல்டு, கபில் குமார், கமலா விஸ்வேஸ்வரன், காஞ்சா இலையா, டேவிட் லாயிட், ராமச்சந்திரா குகா, அசோக் சென், அஜித் சௌத்திரி, சவுரப் தூபே, உபேந்திர பாக்சி, எம்.எஸ்.எஸ். பாண்டியன், அமிதவ் கோஷ் முதலானோர் ஆவர். தமிழில் ஆ. சிவசுப்பிரமணியன், எஸ். மாணிக்கம், ரவிக்குமார், அ. மார்க்ஸ் முதலானோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். விளிம்புநிலை அறிஞர்கள் வரலாறு குறித்தும் தேசியம் குறித்தும் விவாதித்த புதிய போக்குகள் இதன் தொடக்க நிலையாகும்.

## விளிம்புநிலையினரின் விடுதலை குறித்த ஆய்வு

விளிம்புநிலை மக்கள் கல்வி நிலையில் உயர்வடைந்தால் விடுதலை என்பது சமூகம், பொருளாதாரம், அரசியல், கல்வி ஆகிய தளங்களில் சமூகத்தில் உயர்வடைய இயலும். விளிம்புநிலையினரின் நிலைகளில் மேம்பாடு அடைவதன் வாயிலாகச் சாத்தியப்படும்.

> *'இந்திய தேசிய இந்துத்துவ மேலாதிக்க வளையத்திற்குள் கட்டுண்டு கிடக்கின்றவரை விளிம்புநிலை மக்கள் விடுதலை பெறமுடியாது. இந்தியத் தேசியத்தை விடுத்து இந்துத்துவத்தை மட்டும் எதிர்ப்பது என்பதும் இவர்களது விடுதலைக்கு வழி வகுக்காது. மாறாக இந்திய தேசியத்தையும் இந்துத்துவத்தையும் ஏககாலத்தில் எதிர்த்து அதன் ஆதிக்கப் படியிலிருந்து விடுபடும்போது மட்டுமே இனமக்களும் விடுதலை பெறமுடியும்' என்று இராஜேந்திரசோழன் 'வல்லினம்' என்ற இலக்கிய இதழில் சுட்டிக்காட்டியுள்ளார்.*[14]

விளிம்புநிலையினராகக் கருதப்படுவோர் தங்களுக்கென எந்த உரிமையையும் பாராட்டுவதில்லை. இன்னுஞ் சொல்லப் போனால் தங்களது இப்போதைய இருப்பை நியாயப்படுத்துவதாகவே அவர்களது தொன்மப் புராணங்களும் வாழ்வு நிலைகளும் அமைகின்றன. இந்த மக்கள் ஒட்டுமொத்தச் சமூக அமைப்பையே முற்றாக நிராகரிப்பர்.

> *'சமூக மாற்றத்திற்கான வாய்ப்பு விளிம்புநிலையினருக்கு மிகவும் அரிது. ஒரு வேளை ஒட்டுமொத்தச் சமூக மாற்றம் நிகழ்வது பெரிய அல்லது மைய சமூகம் முற்றாக விளிம்பு*


> *நிலைக் குழுக்களைத் தன்வயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமானால் நிகழலாம். கூர்ந்து நோக்குங்கால் பெரும்பான்மை சமூகங்கள் சிறப்பானவை எனக் கருதும் விழுமியங்களை முற்றாய்ப் புறந்தள்ளும் தன்மையே இந்தச் சேரி வாழ் மக்களின் விளிம்புநிலை அடையாளமாக அமைவதை உணர வேண்டும்' என்று ஆ. செல்லப்பெருமாள் 'வல்லினம்' இதழில் பதிவுசெய்துள்ளார். மேலும் ஒவ்வொரு விளிம்புநிலைக் குழுவுக்குள்ளும் ஒருங்குத் தன்மை (Homogeneity) காணப்படும். எடுத்துக்காட்டாக அலிகளை ஒரு விளிம்புநிலைக் குழுவாக அடையாளப்படுத்தினால் அவர்களுக்கிடையே இன்னொரு குழுவான பழங்குடிகள் தத்தமக்குள் எந்தவித ஏற்றத்தாழ்வும் கிடையாது எனவும் குறிப்பிடுகின்றார்.*[15]

பார்ப்பனர், பார்ப்பனல்லாதவர்கள் என்னும் வகைப்பாட்டிற்குப் பிறகு இடைநிலைச் சாதிகள், தலித்துகள் என்னும் இருவகை அடையாளப்படுத்துதல்கள் நடந்து வருகின்றன. இதற்குப் பிறகு தலித்துகள் எனும் அடித்தள மக்கள் குறித்தும், இனக்குழுக்கள், நாடோடிகள் எனும் விளிம்புநிலை மக்கள் குறித்தும் பேசப்படுகின்றன. இவ்வகை அடையாளப்படுத்துதலுக்குப் பின் வலுவான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

> *'விளிம்புசார் ஆய்வுகளுக்கு வரும் முன்னர் இந்தியாவிலுள்ள ஆய்வுப் போக்குகளை விளிம்புநிலை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதை மூன்று பிரிவாகக் கொண்டனர். ஒன்று: 1960-கள் முதல் விளிம்புநிலை ஆய்வுகள் முதல் தொகுதி வெளியான 1982 வரையான காலகட்டம். இரண்டு: 1982 முதல் 1987 வரையிலான காலகட்டம் - விளிம்புநிலையின் புதிய போக்குகள். மூன்று: விளிம்புநிலை ஆய்வுகட்கு முந்தைய காலகட்டம் - காலனியக் கருத்தியலைக் கட்டவிழ்த்தல் மற்றும் தேசியவாத அணுகுமுறை என்பதாக அமைந்தது. 1982-இல் இருந்து 1987-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் புதிய போக்குகளும் அதற்குப்பின் வந்த ஆண்டுகளில் வந்த ஆய்வுகளும் இதுவரை எழுதப்பட்ட வரலாற்றை மேட்டுக் குடியின் வரலாறு என முழங்கியது. இம்முழக்கத்தின் பின்னணியில் இந்தியச் சூழலில் விளிம்புசார் ஆய்விற்கு வித்திட்டவர் ரணஜித்குகா என்பவரே. இவரின் ஆய்வுச் சிந்தனை தெற்காசியா என்ற நிலவியல் எல்லை கடந்து உலகெங்கும் பேசப்படுகிறது' என்று மணிகோ. பன்னீர்செல்வம் தமது கட்டுரையில் விளிம்பு நிலையினர் குறித்த ஆய்வாகச் சுட்டியுள்ளார்.*[17]

## விளிம்புநிலையினரின் விடுதலைக்குப் போராடியவர்கள்

விளிம்புநிலை மக்களின் உரிமைப் போருக்காகப் பலரும் பல்வேறு காலகட்டங்களில் போராடி வந்திருக்கின்றனர். அந்த மக்களின் சுய கௌரவத்தையும் உரிமையையும் பெற்றுத் தருவதில் தங்களின் சுயஉணர்வுகளைக்கூடத் தொலைத்திருக்கிறார்கள் எனலாம். அவர்களில் அம்பேத்கர், நாராயணகுரு, மகாத்மா புலே, அண்ணா, பெரியார், இரட்டைமலை சீனிவாசன், எல். இளையபெருமாள், அயோத்திதாச பண்டிதர், அய்யன்காளி ஆகியோர் குறிப்பிடத்தகுந்தோர்.




*படம் 2: விளிம்புநிலையினரின் விடுதலைக்குப் போராடிய தலைவர்கள்*

### *அம்பேத்கர்*

அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினார். தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்தார். மேலும் இவர் செய்த தொண்டினாலும், இவரது கடும் முயற்சியினாலும் அரசுப் பள்ளிகள், மருத்துவமனைகள், கிணறு, குளம் முதலியவற்றில் அனைவருக்கும் உரிமை உண்டு என்று அரசு ஆணை பிறப்பித்தது. இதனால் தாழ்த்தப்பட்ட விளிம்புநிலை மக்கள் பல உரிமைகளைப் பெற்றார்கள்.

> *'அடிமைக்கு நீ ஓர் அடிமை என்று உணர்த்து; அப்பொழுது அவன் கிளர்ந்தெழுவான்' என்ற தமது கூற்றிற்குச் செயல்வடிவம் தந்து, கற்பி, கிளர்ச்சி செய், ஒன்று சேர் என்ற தாரக மந்திரத்தைக் கற்றுக் கொடுத்து விடுதலைக்கான வேட்கையைத் தூண்டினார். கடவுள், கோட்பாடு, வேதம், தருமம், சாஸ்திரம் என்ற பேரால் விளிம்புநிலை மக்களைப் பண்பாட்டு நச்சு வளையத்துக்குள் சிக்க வைக்க மூலக்காரணியான சாஸ்திரங்கள், வேதங்கள் ஆகியவற்றின் அதிகாரத்தை அழிக்க வேண்டுமென்று சாதிக் கோட்டையில் உடைப்பு ஏற்படுத்தவும், வேதங்களையும் சாஸ்திரங்களையும் வெடி வைத்துத்*

> *தகர்க்கவும் அறைகூவல் விடுத்தார்' என்று 'தலித் அடையாளத் தேடல்' என்ற நூலில் ஒளி மற்றும் மரி குறிப்பிட்டுள்ளனர்.*[18]

### *நாராயண குரு*

அந்தக் காலத்தில் விளிம்புநிலையினருக்குக் கோவில் வழிபாடு தடை செய்யப்பட்டிருந்தது. எனவே அருவிப்புறத்தில் கீழ்க் குலத்தாருக்காக என்று தனியாக ஒரு சிவன் கோவிலை உருவாக்கினார்.

> *கோவில் தரிசனம் மறுக்கப்பட்டிருந்த அந்தக் காலத்தில் இவர் கோவில் பிரதிஷ்டை செய்தது பலருக்குக் கோபமூட்டியது. சுவாமிகளோ அதற்குப் பதிலாக நான் ஈழவ சிவனைத்தான் பிரதிஷ்டித்தேன் என்று கூறி மேல்குலத்தோரை வாயடைக்கச் செய்தார். சிவகிரி, குளத்தூர், வைக்கம் முதலிய இடங்களிலும் சிவன் கோவிலைப் பிரதிஷ்டித்து ஈழவ மக்களை வழிபடச் செய்தார். கள்ளும் சாராயமும் நிவேதித்து உயிர்ப்பலிகள் செய்து வந்த மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக சத்துவ குணத்திற்கு மாற்றினார்.*

1903-ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் என்ற சங்கத்தை நிறுவினார். இதுவே எஸ்.என்.டி.பி. என்று அழைக்கப்படுகிறது. இதன் மூலம் மிகப்பல பள்ளிகளைத் தொடங்கி அதில் பாமர மக்களைக் கல்வியறிவு பெறச் செய்தார். ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் என்பது இவரது உபதேசம். சாதி மத பேதமின்றி வாழ்ந்த இவர் 1929-ஆம் ஆண்டு மறைந்தார்.

### *மகாத்மா பூலே*

மிகவும் தாழ்த்தப்பட்ட (சூத்திராதி சூத்திரர்) சாதியினரின் பெண் குழந்தைகளுக்கான பள்ளியை 1848-ஆம் ஆண்டு இந்தியாவில் முதன்முதலாக புலே தொடங்கினார். 1860-ஆம் ஆண்டில் விதவை மறுமணத்தைப் பற்றிய எழுச்சியை ஏற்படுத்தினார். இவர் காலத்தில் வாழ்ந்த பிற சமூகச் சீர்திருத்தவாதிகளுக்கு இந்தக் கொள்கை வெறும் பிரச்சாரத்துக்குரிய கொள்கை மட்டுமே; ஆனால் புலேவுக்கு அதுவே புரட்சிக்குரிய செயலாகும்.

> *1876-ஆம் ஆண்டிலிருந்து 1882-ஆம் ஆண்டு வரையிலும் புனே நகராட்சி மன்ற உறுப்பினராகப் புலே தேர்ந்தெடுக்கப்பட்டார். மதுவிலக்கிற்காகத் தீவிரமாக வேலை செய்த முதல் இந்தியர் புலே தான்*[20]

குழந்தைகளைக் கருவிலேயே கலைக்க வேண்டிய நிலையிலோ, பிறந்த பின் அவற்றைக் கொல்லவேண்டிய நிலையிலோ உள்ள விதவைப் பெண்களுக்கான இல்லத்தை 1863-ஆம் ஆண்டு

நிறுவினார். 1864-ஆம் ஆண்டில் நடைபெற்ற சரஸ்வத் பிராமண விதவையின் மறுமணத்தில் முக்கிய பங்கு புலேயினுடையது.

### *பெரியார்*

தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவ சமதர்மத்தைக் காணப் பெரும் ஆவல் கொண்டவர். உரிமை வேட்கைக்காகக் காங்கிரசில் சேர்ந்து அதை மக்கள் இயக்கமாக மாற்றினார். பெண்களை அழைத்துச்சென்று கள்ளுக்கடை மறியல் போராட்டம் நடத்தினார். காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி நீதிக்கட்சியிலிருந்து சமூக நீதிக்காகத் தொடர்ந்து போராடியவர்.

கேரளாவில் உள்ள வைக்கம் எனும் சிறிய நகர் திருவாங்கூர் சமத்தானத்தில் உள்ளது. கேரள வழக்கப்படி அவர்ணர் மக்கள் என்றழைக்கப்படும் தலித் மக்களும், ஈழவர்களும் கோயிலுக்குள் நுழையவும், கோயில் இருக்கும் வீதிகளில் நடக்கவும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. 1924 இல் சாதி எதிர்ப்புகள் வலுத்திருந்த சமயமாதலால் சாதி எதிர்ப்புப் போராட்டத்தைக் காந்திய வழியில் நடத்த வைக்கம் சிறந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வைக்கம் போராட்டம் கேரள சீர்திருத்தவாதியும் நாராயணகுருவின் இயக்கத்தைச் சேர்ந்தவருமான டி. கே. மாதவன் என்பவரால் முன்னெடுக்கப்பட்டது. அவர் காங்கிரசில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார். வைக்கம் போராட்டத்திற்கு முப்பதாண்டு கால வரலாறு உண்டு. டி. கே. மாதவன் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியிட்டு திருவிதாங்கூர் சட்டச்சபை உறுப்பினராக ஆனதும், அந்தப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்தார். அன்னி பெசன்ட்டின் உதவியையும் பின்னர் காந்தியின் உதவியையும் நாடினார். போராட்டத்தைக் காந்தியின் வழிகாட்டலுடன் அறப்போராட்டமாக முன்னெடுத்தார்.

### *அடிமைகளின் தலைவர் அய்யன்காளி*

அய்யன்காளி தமக்கும் தம் மக்களுக்கும் மறுக்கப்பட்ட மனிதத் தன்மைக்குள் மீண்டும் மீண்டும் நுழைந்தார். அவரைப் பின்பற்றி அவர்தம் மக்களும் அவர்களது மனித இருப்பையும் மனிதத் தன்மையையும் வெளிப்படுத்துவதற்காகப் பின்தொடர்ந்தனர். ஒட்டுமொத்தத் தாழ்த்தப்பட்ட இனமும் பொதுமையான மனித இனத்திற்குள் நுழைந்தது.

> *அய்யன்காளியின் நவீன சமூகவெளி, அதற்குமுன் தாழ்த்தப்பட்ட மக்கள் அறியாத புதிரான பிரதேசமாகவே அவர்கள் முன் விரிந்துகிடந்தது. அறியப்படாதவற்றை அறிவதன் மூலமும், செய்யக் கூடாதவற்றைச் செய்வதன் மூலமும் அவர்கள் புதிய மார்க்கத்தின் புரவலர்கள் ஆனார்கள். இருள் வெளியில் சஞ்சரித்த எண்ணற்ற*

> *வேறுபாடுகளால் கொதித்த சமூக உலைக்களங்களில் கரைந்து போய்க் கொண்டிருந்த மக்களைக் காப்பாற்றிய அய்யன்காளி தீவிரமான விடுதலை வீரர்க்குரிய தேர்விற்கு கேரளத்தில் விவாதமற்ற உதாரணமாகத் திகழ்ந்தவர்.*[23]

அய்யன்காளி ஒடுக்கப்பட்ட சாதிகளின் பிரச்சினைகளை ஒரு சமூகப் பிரச்சினையாக மட்டும் கருதவில்லை. ஒடுக்கப்பட்ட சாதிகளின் பகை சக்திகளான உயர்த்தப் பட்ட சாதியினரின் பிடியிலிருந்து விடுதலைக்கும் சமத்துவத்திற்கான வாய்ப்பைப் பெறும் அரசியல் பிரச்சினையாகவும் கொண்டார். எல்லா வகையான முன்னேற்றத்திற்கும் அரசியல் அதிகாரப் பகிர்வை அடைந்தால்தான் தாழ்த்தப்பட்டோர் தங்கள் உரிமைகளைப் பெறமுடியும் என்பதில் உறுதியாக இருந்தார்.[24]

### *அயோத்திதாச பண்டிதர்*

1892-ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா டவுன் அறையில் நடைபெற்ற மகாஜன சபையின் கூட்டத்தில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்காகக் கலந்துகொண்ட அயோத்திதாச பண்டிதர் விளிம்புநிலை மக்களின் விடுதலைக்கான முதல் படியை எடுத்து வைத்தார்.

> *சிவராம சாஸ்திரி என்பவர் 'சிவனும் விஷ்ணுவும் என்றைக்கும் உங்களின் கடவுள்கள் இல்லை; மதுரைவீரன், காட்டேரி, கருப்பண்ணசாமி மாதிரியான சிறு தெய்வங்களே உங்களுக்கானவை' என்றாராம். அதற்கு அயோத்திதாசர், 'நீங்கள் சொல்வது போல் இருக்கும் என்றால் உங்களுடைய கடவுள்கள் எங்கள் மக்களுக்கு என்றைக்கும் வேண்டாம்' என்று மறுத்திருக்கிறார்.*[25]

### *எல். இளையபெருமாள்*

நமக்கான அதிகாரத்தின் மீட்சியும் விடுதலையும் நாம் கையில் எடுக்கும் ஆயுதத்திலும் போர் முறையிலும்தான் திணிக்கப்படும். இதனை மையப்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராட்டத்தைத் தொடங்கியவர்களில் தமிழகத்தில் அடையாளப்படுத்தக்கூடியவர் எல். இளையபெருமாள் ஆவார். பள்ளிப் பருவத்திலேயே தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராடி வெற்றிபெற்றவர்.

> *கீழ்க்கடம்பூர், செட்டித்தாங்கல் ஆகிய சேரி மக்கள் தங்கள் பிணத்தை அரசாங்கச் சாலை வழியே எடுத்துச் செல்லச் சாதி இந்துக்கள் தடை விதித்தனர். மறுக்கப்பட்ட பாதையின் வழியே பிணத்தை எடுத்துச்செல்ல முயற்சி செய்தனர். இதனால் ஒடுக்கப்பட்ட சேரி மக்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே கலவரம் மூண்டு துப்பாக்கிச் சூடு நடந்தது. இச்செய்தியை அறிந்த எல். இளையபெருமாள், சுவாமி சகஜானந்தா, முனுசாமி*

Dr. M. Tamilselvi. *Kalanjiyam International Journal of Tamil Studies*, Vol. 6 No. 02, August 2026,
**https://doi.org/10.63300/kijts06022026.53**

> *பிள்ளை, சிவராஜ் ஆகியோருடன் சம்பவ இடத்திற்குச் சென்று இரு தரப்பினருக்கும் இடையே சமாதானம் செய்து வைத்தார்.*[26]

விளிம்புநிலை மக்களுக்கு நேர்ந்த கொடுமைக்குக் குரல் கொடுத்து அவர்களின் இன்னல்களை நீக்கியவர். மேலும் இரெட்டியூர் ஆதிதிராவிட மக்கள் பொதுச்சாலையில் பிணம் தூக்கிச் செல்வதற்குத் தடை இருந்தது. 1954-ஆம் ஆண்டில் எல். இளையபெருமாளும் சமூகச் சங்கத்தாரும் முன்னின்று அப்பாவு என்பவர் தலைமையில் போராடி அந்தத் தடையை நீக்கி வெற்றி பெற்ற செயல் பெருமைக்குரியதாகும். செங்கற்பட்டு, வட ஆற்காடு, மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் ஏழைகளுக்கு அரசு வழிப் பாதுகாப்புத் தேடி 1983-ஆம் ஆண்டில் அதனைப் பெற்றுத் தந்தார்.

## பெருமாள்முருகனின் படைப்புகளில் விளிம்பு நிலை மாந்தர்கள்

பெருமாள் முருகனின் படைப்புகளில் தலித்துகள், பெண்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், விபச்சாரிகள், உதிரித் தொழிலாளர்கள் ஆகியோர்களின் வாழ்க்கை நிலை குறித்த செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. இந்த மக்களின் வாழ்வியல் போராட்டங்கள் மிகத் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. விளிம்புநிலை மக்கள் போராட எதிர்கொள்ளும் சிக்கல்களும் துயரங்களும் எண்ணிலடங்கா. அவற்றைப் பற்றிய செய்திகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.




*படம் 3: பெருமாள்முருகனின் படைப்புகளில் விளிம்புநிலை மாந்தர்கள் குறித்த கருப்பொருள்கள்*

### *ஆதிக்கச்சாதியினர் விளிம்புநிலையினரின் முன்னேற்றத்தைத் தடுத்தல்*

ஆதிக்கச்சாதியினர் சமூக மதிப்பில் என்றுமே தங்களை முன்னிறுத்திக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். அவர்களது முன்னேற்றத்திற்கு எவரும் தடையாக வரின் அதற்காகப் போராடவும் தயங்குவதில்லை. சிறு செயல்களில் கூட விளிம்பு நிலை மக்கள் பங்குபெற்று வெற்றி பெறுவதை விரும்புவதில்லை. ஒரு மனிதன் சகமனிதனின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காகச் சாதி, பொருளாதாரம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துகின்றனர்.

*நிழல் முற்றம் என்ற நாவலில்*

இளைஞர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஊரில் நடைபெற இருந்த திருவிழாவில் நாடகத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். விளிம்புநிலைச் சாதியைச் சேர்ந்த சக்திவேல் நாடகத்தை எழுதி இயக்குபவனாகச் செயல்பட்டான். ஊர்த் தலைவரான சுப்பிரமணியால் இந்த நிகழ்ச்சியை ஏற்றுக்கொள்ள இயலவில்லை; ஏனெனில் விளிம்புநிலையினரின் உதவியால் நடத்தப்படும் நாடகத்தில் ஆதிக்கச்சாதியினர் நடித்தனர். ஆகையினால் சுப்பிரமணி விளிம்புநிலையினரோடு உறவாடுவதைத் தவிர்க்க கோரியும், நாடகத்தில் நடிப்பதனால் ஏற்படும் சம உரிமையைத் தடுப்பதற்காகவும் மூர்த்தியிடம் பேசுகின்றார். இளைஞர்கள் அனைவரும் ஒற்றுமையோடு செயல்பட அவர்களிடம் சாதி சமயப் பூசல்களை ஏற்படுத்தும் வகையில் சுப்பிரமணியின் செயல்பாடு அமைகிறது. சுப்பிரமணி தமது சாதியைச் சேர்ந்த மூர்த்தியிடம் கீழ்க்கண்டவாறு உரையாடுகின்றார்.

> *'என்னடா சினிமா அனுபவம், பெரிய சினிமா. என்னய உட்டா இன்னக்கி நாலு நாடகம் எழுதித் தருவேண்டா. சக்கிலியப் போயி புடிச்சுக்கிட்டுத் தொங்கறானுவ. இப்பவே அவனுங்க நம்ம பேச்ச மதிக்கறது கெடையாது; தலையில நடக்கறானுவ. நாடகம் அது இதுன்னு கூடிக் கொலவுனா மேல ஏறித்தான் முதிப்பானுவ. அதெதுக்கு மாமா சாதி அது இதுன்னு பேசாதீங்க. அவனுங்களும் நம்மூருக்காரனுங்கன்னுதான் சேத்தரம். அவனுங்களுக்கு இதுல பங்கிருக்குது' - தங்களுடைய சாதியின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக ஆதிக்கச்சாதி இளைஞர்களிடம் விளிம்புநிலையினரோடு சேர்ந்து நாடகம் நடத்திட வேண்டாம் என்று கூறிவிடுகிறார் சுப்பிரமணி.*

### *விளிம்புநிலையினரின் பிறப்பை இழிவுபடுத்துதல்*

ஆதிக்கச்சாதி இனத்தைச் சேர்ந்தவர்கள் சிறுவராக இருந்தாலும் தங்களை மரியாதையோடு நடத்திட வேண்டுமென்று எண்ணுகின்றனர். ஆனால் ஆதிக்கச்சாதியினர் விளிம்புநிலை மக்கள் அனைவரிடமும் வயது வேறுபாடின்றியும் மரியாதையின்றியும் பேசுகின்றனர். அந்த மக்களின் பிறப்பையே கேள்விக்கு உள்ளாக்குகின்ற விதமாக இழிவான சொற்களைக் கொண்டுத்

தாக்கிவிடுகின்றனர். சோடாக் கடைக்காரனின் மகன் முத்துவிற்கும் சக்திவேலுவிற்கும் இடையே நடந்த உரையாடல் வழி இதனை அறியலாம். இதனை நிழல் முற்றம் என்ற நாவலில் வழியாகக் கவனிக்கலாம்.

> *'டேய், அந்தப் பைப்பத் திருவி உட்றா; தண்ணி போவுட்டும். அத எதுக்குத் திருவி உடுவானே, நாமதான் மேல மோந்துக்கறமில்ல. அவசரத்தில் அவனுக்கு எக்கச்சக்கமாய்க் கோபம் வந்தது. தண்ணி போவுட்டுண்டா தொட்டியில தண்ணி கெடந்தா சோடா விக்காதுடா சொல்றது, கொஞ்சமாச்சும் புரிஞ்சால்ல' - சக்தியின் மேனி முழுக்க அதிர்ந்தது. முகமெங்கும் சட்டிக் கரியை அள்ளிக் கொட்டிய மாதிரி இருள் திரண்டது. கண நேரத்தில் அவை சாம்பல் பூத்த கங்குகளாய் ஒளிர்ந்தன. எதுவும் செய்யத் தோன்றாமல் அப்படியே நின்றான்.*

ஆதிக்கச்சாதியினரின் கடையில் வேலை செய்கின்றவர்கள் தங்களுடைய அடிமை என்கிற எண்ணத்திலும் அவர்களை இழிவாகப் பேசினால் அவர்களால் எதிர்த்துக் கேட்கமுடியாது என்றும் எண்ணுகின்றனர். சக்திவேல் தனது கடையில் வேலை செய்கிறவன் என்பதைக் கருத்தில் கொண்டு காரணமின்றி அவனுடைய பிறப்பையும் பெற்றோர்களையும் உதாசீனப்படுத்தி விடுகிறான் முத்து. அந்த நிகழ்ச்சியைப் போல ஆதிக்கச்சாதியினரின் பிறப்பை விளிம்புநிலையினர் உதாசீனப்படுத்தியிருந்தால் அந்த மக்களை ஆதிக்கச்சாதியினர் உயிருடன் விட்டு வைத்திருப்பார்களா என்பது சந்தேகத்திற்குரியதுதான். ஆதிக்கச் சாதியினருக்கு ஒரு நீதி, விளிம்புநிலையினருக்கு ஒரு நீதி கற்பிக்கப்படுகிறது. அடிப்படையிலேயே இங்குப் பாகுபாடு காட்டப்படுகிறது.

### *விளிம்புநிலையினர் உறவுமுறைகளை இழிவுபடுத்துதல்*

இன்று ஏராளமான இளைஞர்கள் எதிர்ப்பாலினரோடு பேசிக்கொள்ளும்போது சகோதர உணர்வை உடையவர்களைப் போலவும், உறவாடுவதில் வாழ்க்கை இணையோடு நடந்து கொள்வது போலவும் செயல்படுகின்றனர். இதனால் உறவுநிலைகளில் உண்மைத் தன்மை இல்லாது போய்விடுகிறது. கருவாச்சியின் நடத்தை முறைக்கு ஆதிக்கச்சாதியினரும் ஒரு வகையில் காரணமாகின்றனர். அந்த மக்களுக்கு வேலை கொடுத்து அதற்கு ஏற்றாற்போல ஊதியம் வழங்கியிருப்பின் இவ்வாறான நிலை கருவாச்சிக்கு உருவாகி இருக்காது என்பது திண்ணமாகும்.

இளைஞன் ஒருவன் தன்னுடைய அக்காவாக சரசுவை எண்ணினான். அவ்வாறே உறவுமுறையைக் கூறி உரிமையாகப் பழகி வந்தான். ஆனால் அவனுடைய மனத்தில் சரசுவைப் பற்றிய தவறான எண்ணமும் நினைப்பும் இருந்தது. சகோதர உறவை இழிவுப்படுத்துகின்ற

இளைஞனின் எண்ணத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியிருக்கிறார். இதனை நிழல் முற்றம் புதினம் படம் பிடித்துக் காட்டுகிறது.

> *கறுத்த முகத்துடன் ஒளிகூடிய சரசுக்கா. அவளின் அளவான முலைகள் அக்காமுறை ஆவுது என்று சொல்லிச் சொல்லி அடக்கிய தன் மனம்.*

ஒவ்வொருவருடைய வக்கிரமான எண்ணம் ஏதாவது ஒரு தருணத்தில் வெளிப்பட்டுவிடும் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். பாலியல் உணர்வு மேலோங்கியதால் சகோதர உறவாக இருந்தாலும் தவறாக நினைக்கத் தூண்டுகிறது. அவ்வாறு கற்பனை செய்து தன்னுடைய மனத்தை மகிழ்ச்சிப்படுத்திக் கொள்ளக்கூடிய மனம் படைத்தவனாக இருக்கிறான்.

### *விளிம்புநிலையினரின் ஒழுக்கமற்ற நடவடிக்கைகள்*

விளிம்புநிலையில் வாழக்கூடிய மக்களுக்கென ஒரு கட்டுப்படான வாழ்க்கைமுறை இல்லை. அவர்கள் மனம்போன போக்கினில் வாழக்கூடிய சூழலுக்கு ஆட்பட்டுவிடுகின்றனர். அதுமட்டுமின்றி, உழைப்பதற்கும் உழைப்பிற்கான ஊதியத்தைப் பெறுவதற்கும் வாழ்நாள் முழுவதும் செலவழித்து விடுகின்றனர். வாழ்க்கையை அனுபவித்து வாழ்வதற்கும், அதற்கான நேரத்தை ஒதுக்குவதற்கும் அவர்களால் முடியாமல் போகிறது. ஆகையினால், சிறுபான்மையான விளிம்புநிலையினர் ஒழுக்கமற்ற தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

#### *விபச்சாரத் தொழிலில் ஈடுபடல்*

கருவாச்சி என்பவள் சக பெண்களின் வாழ்வைப் பங்கு போட்டுக்கொள்ளக் கூடியவளாக இருக்கிறாள். தன் மேனியின் வனப்பை மெருகேற்றி ஆண்களின் ஆசைகளுக்கும் உணர்வுகளுக்கும் வடிகாலாக அமைகிறாள். இவர்களை மெழுகுவர்த்தியோடு ஒப்பிட இயலுகிறது. மெழுகுவர்த்தி தன்னை அழித்துக்கொண்டு பிறருக்கு வெளிச்சத்தைத் தரக்கூடியது. அதைப்போல விபச்சாரிகள் தங்களுடைய மனசை வெறுத்துவிட்டுப் பிற ஆண்களின் இச்சைக்கு ஆளாகி அவர்களுக்குத் தெளிவை உண்டாக்குகின்றனர். இக்கருத்தை நிழல் முற்றம் தோலுரித்துக் காட்டுகிறது. கருவாச்சி ஓர் ஆணுடன் நடந்துகொண்ட முறையை எடுத்துரைக்கின்ற வகையில் கீழ்க்காணும் பகுதி அமைந்துள்ளது.

> *அவள் தலை நிறைய மல்லிகையை ஒடித்து வைத்திருந்தாள். சரிகைச் சேலையும் அலங்காரமும் அப்போதுதான் செய்துகொண்டு வருகிறாற்போல் அத்தனை புதுசாகத் தெரிந்தன. இடுப்புச் சேலை வேண்டிய மட்டும் கீழே இறங்கியிருந்தது.*

விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்கள் தங்களுடைய உடல் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அந்தத் தொழிலில் ஈடுபடுவதில்லை. பெண்கள் தங்கள் உணர்ச்சிகளுக்கு வடிகாலாக

விபச்சாரம் செய்கின்றனர். அத்தகைய நிலைக்குச் சமுதாயமே அவர்களைத் தள்ளிவிடுகிறது. கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினியின் 'மன்மத இயந்திரங்கள்' என்ற கவிதைத் தொகுப்பில் விலைமாதர்கள் அனுபவிக்கும் நரக வேதனையை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளார்.

*ஓரினப் புணர்ச்சியில் ஈடுபடல்*

விளிம்புநிலையினர் உடலுழைப்பை அதிகமாகச் செலவிட்டாலும் அவர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. படத்துக்காரன் என்பவன் தன்னுடைய மனைவி குழந்தைகளை விட்டு 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற குறுந்தொகை கருத்துக்கு ஏற்பத் தன் குடும்பத்திற்காக அனைத்துச் சுகங்களையும் இழக்கின்றான். தன்னுடைய மனைவியின் இன்பத்தைப் பெற இயலாத தருணத்தில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுகின்றான். படத்துக்காரன் மற்றும் சக்திவேல் ஆகியோர்க் கிடையிலான உரையாடல் வழி நிழல் முற்றம் வழி அறியலாம்.

> *பாலியல் உணர்வுக்கு ஒரு வடிகால் தேவை. ஆகையினால் படத்துக்காரன் சக்திவேலிடம் தன் உணர்வுகளை வெளிப்படுத்துகிறான். அடக்கி வைக்கப்பட்ட மன உணர்வுகள் ஒரு நேரத்தில் வெளிப்பட்டு மிகப்பெரிய விளைவுகளை உண்டாக்கிவிடும்.*

உணர்வுகளை மறுதலித்துவிட்டுப் பொருளாதாரத்தை இலக்காகக் கொண்டு செயல்பட்ட படத்துக்காரனின் மனவுணர்வு சிதைவடைகிறது. படத்துக்காரனின் மனைவி முகச் சாயலோடு ஒத்துள்ள சக்திவேலிடம் தன் மனவுணர்வுகளையும், உடலியல் தேவைகளையும் வெளிப்படுத்தி விடுகிறான்.

*திருடுவதை நியாயப்படுத்தல்*

பொதுவாக ஒரு மனிதன் பிறிதொரு மனிதனின் பொருளை அபகரிப்பதில் அதிக அக்கறை செலுத்துகிறான். அடுத்தவரின் உழைப்பைத் திருடத் திட்டமிடுகிறான். நேர்மை, உண்மை, மனச்சாட்சி ஆகியவற்றைத் தொலைத்துவிட்டு நேர்மைக்கு மாறாக நடக்கிறான். சக்திவேலும் இன்னொரு ஆணும் சோடாக்கடைக்காரரிடம் பேசுவது கீழ்க்கண்டவாறு அமைகின்றது. இக்கருத்தை நிழல் முற்றம் முன் வைக்கிறது.

விளிம்புநிலையில் வாழ்ந்த இளைஞர்களான சக்திவேலும் நடேசனும் காலணிகளைத் திருடிக்கொண்டனர். ஆதிக்கச்சாதியினர் மட்டுமே அத்தகைய விலையுயர்ந்த செருப்பை அணிவர். விளிம்பு நிலையின மக்களும் அவ்வகையான விலை உயர்ந்த செருப்பினை அணிய எண்ணித் திருடுகின்றனர். தாங்கள் திருடுவது தவறான செயல் என்பதை உணராமல் தொடர்ந்து திருட்டுத் தொழில் செய்கின்றனர்.

சக்திவேல் தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான பண வசதியின்றி இருந்தான். தியேட்டரில் வேலை செய்தான். அவற்றில் இருந்து பெறப்பட்ட பணத்தில் வாழ்க்கையைத் திட்டமிட்டு நடத்த இயலவில்லை. ஆகையினால் தியேட்டருக்குப் படம் பார்க்க வருகின்ற நபர்களிடம் திருடி அவற்றைக் கொண்டு வாழ்க்கையை நடத்தினான். இதனை நிழல் முற்றம் என்ற நாவல் தோலுரித்துக் காட்டுகிறது.

பிறரின் பொருளை அபகரிப்பதால் அவரின் மனம் எப்படி பாடுபடும் என்பதைப் பற்றியெல்லாம் சிறிதும் அக்கறை கொள்ளாது தன்னுடைய நலனைப் பேணுவதில் மட்டும் அக்கறை செலுத்தக்கூடிய சுயநலவாதியாக இருக்கிறான் சக்திவேல். திருடுவதிலேயே தன் சிந்தனையை செலுத்தி உழைப்பதை மறக்கக்கூடிய நிலைக்கு ஆளாகியிருக்கிறான் சக்திவேல்.

### *உளவியல் மனக்கட்டமைப்புகள்*

விளிம்புநிலை மக்களின் மனம் எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கும். ஏனெனில் ஆதிக்கச்சாதியினரின் வசவான வார்த்தைகள், பாலியல் ரீதியிலான தொந்தரவுகள் போன்ற கொடுமைகளை எல்லாம் அனுபவித்து அவற்றிலிருந்து விடுபட முயலும் மக்களின் மனவேதனை துன்பம் தருவதாக இருக்கிறது. ஆதிக்கச்சாதியினரின் அநீதிகளை எதிர்த்துக் கேட்கத் திராணியற்ற மக்களாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனால் விளிம்பு நிலையினரின் மனம் தாழ்வுமனப்பான்மை உடையதாகக் காணப்படுகின்றது.

### *இயல்பான வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளத் தயங்குதல்*

அதிகாரவர்க்கத்தினர் தங்களை உயர்ந்த சமூக நிலைக்கு உயர்த்திக் கொண்ட பின்னர் பழைய நிலையினை மறந்து விடுகின்றனர். அதுமட்டுமின்றி விளிம்புநிலையினர் பகட்டுத்தனமின்றி இயல்பாகப் பேசிக்கொள்ளக்கூடிய வார்த்தைகளை நஞ்சைவிட இழிவாகப் பார்க்கின்றனர். சமுதாயத்தின் கடைநிலை ஊழியரின் செயல்பாடுகளை விளக்குவதாக கீழ்க்காணும் பகுதி அமைந்துள்ளது. இந்நிலையைப் 'பீக்கதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு விளக்குகிறது.

> *நாங்கள் எல்லோரும் கண்களை மூடி முகம் திருப்பிக் கொண்டோம். அவனுடைய முன்தலை முகம் முழுக்கவும் அடைப்பு உடைபட்டுச் சட்டெனப் பாய்ந்த மலக் கரைசல். உடல் சிலிர்த்து இறுகிக்கொண்டோம். அவன் மெலிந்த உடலின் பாகம் முழுவதும் மலப்பூச்சு.*

கடைநிலையில் ஊழியம் செய்பவனின் உடலில் மலம் ஒட்டியிருந்தது தண்டனைக்கு உரியதாகவும், அந்த மனிதனைத் தீண்டத்தகாதவனாகவும் நான்கு நண்பர்களும் எண்ணுகின்றனர்.

அந்த மனிதன் செய்யக்கூடிய வேலையில் நடைபெறக்கூடிய எதார்த்தமான செயல்களை மிகைப்படுத்திப் பார்க்கின்றனர். இவ்வுலகினில் எதார்த்தமான வாழ்க்கையை ஏற்றுக்கொள்வதில் உள்ள சிக்கலைப் படைப்பாசிரியர் இவ்வாறு விளக்குகிறார்.

### *அனாதையான ஆண் மகனை வாழவிடாது செய்தல்*

ஊரில் மழை பெய்யாததினால் மக்கள் பிழைப்பதற்கு வாழ வழியற்று இருந்தனர். ஆகையினால் கிராமத்திலுள்ள மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அனாதையான முனியப்பனைத் தேர்வு செய்து ஊரின் நன்மை கருதி உயிரையும் பொருட்படுத்தாமல் அவனை அனுப்பினர். ஊரில் உள்ள நிலப்பகுதி அனைத்திலும் பீக்காளான்கள் நிறைந்திருந்தன. ஆகையினால் நிலத்தின் விளைச்சலை மேம்படுத்த இயலாமல் போய்விடுகிறது. இதனால் கிராம மக்கள் மிகுந்த சிக்கலுக்கு ஆட்பட்டு விடுகின்றனர். முனியப்பனின் துணிச்சலான நிலையினை ஆசிரியர் எடுத்துக் கூறுவதாக அமைந்திருக்கிறது.

> *அவனின் அசையாத தன்மையே அவனுக்கு எதிரியாகவும் மாறியிருந்தது. அவனைப் பழிவாங்கும் எண்ணம் ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறந்திருக்க வேண்டும். அவனை அனுப்ப மறுப்பதற்குத் தாயோ தந்தையோ இல்லை. ஒரு கவிந்த பொழுதில் தேவையான ஆயுதங்களைக் கையிலெடுத்துக் கொண்டு எல்லை கடந்து அவன் போனான். பெண்களும் ஆண்களும் குலவையிட்டு வழியனுப்பினார்கள்.*

அனாதையான அவன் முனியப்பன் என்ற கடவுளின் பெயரை வைத்திருந்ததால் அப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவான் என்று ஊர்மக்கள் நம்பினர். முனியப்பன் புகை உருவத்தை அழிப்பதற்குச் செல்கையில் உயிருக்குக் கேடு விளைந்தாலும் அவனைப் பற்றி அக்கறை கொள்வதற்கும், நலம் விசாரிப்பதற்கும் யாருமில்லை. ஆகையினால் கிராம மக்களின் எதிரியை வெல்வதற்கு முனியப்பனைத் தேர்ந்தெடுத்தனர். ஊரில் உள்ள மக்கள் நன்றாக மகிழ்ச்சியாக வாழ்வதற்குத் தன் உயிரைப் பணயம் வைக்கக் கிராம மக்களால் தேர்வுசெய்யப்பட்டிருந்தான் முனியப்பன்.

### *முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுதல்*

வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருந்தது செந்திலின் குடும்பம். தாயின் சொற்ப வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தினர். இந்த நிலையைக் கண்ட செந்திலின் அத்தை செந்திலை விடுமுறைக்குத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அத்தை வீட்டிற்குச் சென்ற செந்தில் ஓய்வு நேரத்தை வீணாக்காமல் தோட்டத்தைச் சீர்திருத்தம் செய்வதில் ஈடுபட்டான். இதனைக் கண்டு பொறாமைப்படுகிறாள் அவனது அத்தை மகள் மஞ்சு. இதனால் தன் தாயிடம் அவனுக்கு எதிராகத்

தவறான கருத்துகளைக் கூறுகிறாள். ஆகையினால் செந்திலை வீட்டைவிட்டு வெளியேற்றுகிற வகையில் அத்தை சூழ்ச்சி செய்கின்றாள்.

> *தகரக் கதவைத் திறந்து மலத்தை இழுத்து அள்ளுவார்கள். அனைத்தையும் அள்ளி வண்டியில் சேர்ந்த பிறகு தொட்டியைக் கழுவத் தண்ணீர் கேட்பார்கள். மேலிருந்து ஊற்ற வேண்டும். அத்தை செந்திலை அனுப்புவாள். மலம் அள்ள ஆட்கள் வந்திருப்பது தெரிந்தால் மஞ்சு எங்காவது ஓடிப்போய்விடுவாள். செந்திலும் ஓடிப்போகவே விரும்புவான். ஆனால் அத்தையின் கட்டளையை மீற முடியாது.*

அத்தை தன் வீட்டிலிருந்து செந்திலை வெளியேற்ற நினைப்பதற்கான காரணங்கள் இரண்டு: ஒன்று, தன் மகள் மஞ்சுவை விடச் சுறுசுறுப்பாக இருப்பது; இரண்டு, கடினமாக உழைத்துத் தான் இருக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்திருப்பது. அதாவது தங்களை விட வேறு எவரும் முன்னேறி விடக்கூடாது என்பதில் செந்திலின் அத்தை பிடிவாதமாக இருந்தாள். அத்தை தன் மகள் மஞ்சுவை எந்த வேலையையும் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால் செந்திலை மட்டும் கட்டாயப்படுத்தி வேலை செய்யச் சொன்னாள். அதுமட்டுமின்றிக் கழிவறையில் அசுத்தம் செய்ததும் அதனைச் சுத்தம் செய்த ஊழியர்களுக்கு உதவி செய்யுமாறும் செந்திலைக் கட்டாயப்படுத்தி விட்டைவிட்டு வெளியேற்றத் திட்டமிடுகின்றாள்.

### *எதிர்கால வாழ்வை இழந்த விளிம்புநிலையினர்*

விளிம்புநிலை மக்கள் பெரும்பாலும் கல்வியறிவு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். ஆகையினால் வாழ்க்கையைப் பற்றிய புரிதலும் சிந்தனையுமின்றி முன்னேற்றத்திற்கான வாய்ப்புக் கிடைத்தும் பயன்படுத்திக்கொள்ளத் தெரியாதவர்களாக இருந்தனர். அந்த மக்கள் இன்னும் முன்னேறாமைக்கும், வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் வெற்றி பெறாமைக்கும் காரணம் கல்வியறிவின்மையே. உழைப்பதற்கு அஞ்சுகின்ற மனநிலையை உடைய சக்திவேல் எளிமையாக இருக்கின்ற திரையரங்கப் பணியில் இருந்துகொண்டு தன்னுடைய வாழ்நிலையை மேம்படுத்திக் கொள்வதில் தனக்குத்தானே முட்டுக்கட்டை போட்டுக் கொள்கிறான். யானை தன் தலையில் மண்ணை வீசிப் போட்டுக் கொள்வதைப் போலச் சக்திவேல் தன் வாழ்க்கையை முன்னேற்ற வந்த வாய்ப்பினை இழக்கிறான்.

> *ஏன்டா, எடு போலாம். வர டிய்யக் குடிச்சுக்கிட்டு சூத்துக் காஞ்சு கெடந்தாதான் ஆவுமா உனக்கு. வா, இன்னக்கி இட்லி சுட்டுக் கோழி அடிக்கனும்னாங்க. நாலு ஆடு இருக்குது; வெளியுட்டா அதும்பாட்டுக்கு மேயும். நீ நெளலுக் கண்ட எடத்துல உக்கோந்து பாத்துக்கிட்டாப் போதும்.*

விளிம்புநிலை மக்களுக்கான இடஒதுக்கீட்டை அரசு அளிக்கிறது. ஆனால் அவற்றை ஆதிக்கச்சாதியினரே முற்றிலும் பயன்படுத்திக் கொள்கின்றனர். விளிம்புநிலை மக்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்கத் திராணியற்றவர்களாக இருக்கின்றனர். சமூகத்தின் பல தளங்களில் தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் இருப்பினும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கின்றனர். இதற்கு அவர்களுடைய தயக்கம், அக்கறையின்மை, பொறுப்பற்ற தன்மை ஆகியவை அந்த மக்களை முன்னேற விடாமல் செய்கின்றன என்பது மறுக்கவியலாத உண்மையாகிறது.

### *விளிம்புநிலையினரின் எதிர்ப்புக்குரல்*

ஆதிக்கச்சாதியினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிணற்று நீரை விளிம்புநிலை மக்கள் குடிப்பதற்கு எடுக்க விடாமல் மறுத்து விடுகின்றனர். ஆகையினால் அந்த மக்கள் அடிப்படைத் தேவையைக் கூடப் பூர்த்தி செய்துகொள்ள இயலாமல் தவிக்கின்றனர். இந்தச் சிக்கலை மனத்தில் கொண்ட சிறுவர்கள் நால்வரும் ஆதிக்கச் சாதியினரின் செயல்பாடுகளுக்கு எதிராகத் தங்களுடைய எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துகின்றனர். வெள்ளாளக் கவுண்டரின் கிணற்றில் செய்த செயலை முத்து தன் நண்பர்களிடம் கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்துகின்றான்.

> *இந்த வெள்ளாளக் கவுண்டன் தன்னோட கெணத்துல குதிக்கக் கூடாதுன்னு சட்டம் போட்டு வெச்சிந்தான்ல. அதுக்குன்னே நாள் பார்த்துக்கிட்டு இருந்தண்டா. நாமதான் மேல மோந்துக்கறமில்ல... நெஞ்சுல தொண்டையில மூக்குல எல்லா எடத்துலயும் அடச்சிக்கிட்டிருந்த சளி முழுவதையும் சிந்திச் சிந்திக் கெணத்துக்குள்ளே போட்டுட்டன்.*

ஆதிக்க எண்ணத்தைத் தன்னிடத்தில் கொண்டுள்ள வெள்ளாளக் கவுண்டர் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கும் சிறு பிள்ளைகள் குளிப்பதற்கும் தடை விதித்தார். அந்நிகழ்வினைச் சிறுவர்களால் ஏற்க இயலவில்லை. ஆகையினால் ஒவ்வொருவரும் தம் பங்கிற்கு அசுத்தத்தைச் செய்து தன் எதிர்ப்புணர்வை வெளிக்காட்டி, தன் மனத்தை மகிழ்ச்சிப்படுத்திக்கொண்டனர். சிறுவர்களால் வெள்ளாளக் கவுண்டரை எதிர்த்து நேருக்கு நேராக நின்று கேள்வி கேட்க இயலாமையினால் மறைமுகமாகத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துவிடுகின்றனர். பாமாவின் ‘சங்கதி’, ‘கருக்கு’ ஆகிய நாவல்களிலும் கூட விளிம்புநிலை மாந்தரான சமுத்திரக்கிழவி கிணற்றுக்குள் இறங்கி குடிக்கத் தண்ணீர் எடுத்து வரும்போது அந்த நீரில் தன் சிறுநீரைக் கழித்துவிடுகின்றாள். கிழவியின் மனவலியின் எதிர்ப்புணர்வாக இச்செயல் அமைகின்றது.

### சான்றெண் விளக்கம்

[1]. சுபஜா. அ.க., குமரிமாவட்ட விளிம்புநிலை மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் புதிய தலைமுறைக் கவிஞர்களின் கவிதைகள் - ஓர் ஆய்வு, ப. 9.

[2]. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, பக். 1278-1279.

[3]. மேலது, ப. 1279.

[4]. செல்லப்பெருமாள். ஆ., விளிம்புநிலையினரின் அடையாள வெளிப்பாடுகள், ப. 7.

[5]. பக்தவத்சலபாரதி. சீ., மானிடவியல் கோட்பாடுகள், ப. 233.

[6]. பன்னீர்செல்வம். மணிகோ., பாவேந்தர் பாடல்களில் விளிம்பு நிலையினரின் அடையாள வெளிப்பாடுகள்: விமர்சனக் குறிப்புகள், ப. 54.

[7]. சுபஜா. அ.க., குமரிமாவட்ட விளிம்புநிலை மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் புதிய தலைமுறைக் கவிஞர்களின் கவிதைகள் - ஓர் ஆய்வு, ப. 8.

[8]. மேலது, ப. 8.

[9]. இராஜேந்திரசோழன்., இந்திய தேசியக் கதையாடலும் விளிம்புநிலைத் தேயங்களும், ப. 72.

[10]. மேலது, ப. 72.

[11]. ஒளி & மரி., தலித் அடையாளத் தேடல், ப. 85.

[12]. பக்தவத்சலபாரதி. சீ., விளிம்புநிலை ஆய்வுகளின் வரலாறு, ப. 9.

[13]. மேலது, ப. 9.

[14]. இராஜேந்திரசோழன்., இந்திய தேசியக் கதையாடலும் விளிம்புநிலைத் தேயங்களும், ப. 74.

[15]. செல்லப்பெருமாள். ஆ., விளிம்புநிலையினரின் அடையாள வெளிப்பாடுகள், பக். 7-8.

[16]. மேலது, ப. 7.

[17]. பன்னீர்செல்வம். மணிகோ., பாவேந்தர் பாடல்களில் விளிம்பு நிலையினரின் அடையாள வெளிப்பாடுகள்: விமர்சனக் குறிப்புகள், ப. 54.

[18]. ஒளி & மரி., தலித் அடையாளத் தேடல், ப. 85.

[19]. சுபஜா. அ.க., குமரிமாவட்ட விளிம்புநிலை மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் புதிய தலைமுறைக் கவிஞர்களின் கவிதைகள் - ஓர் ஆய்வு, பக். 41-42.

[20]. கனிதா. ச., ஜோதிராவ் புலே சமூக சீர்திருத்தங்களின் தந்தை, ப. 4.

[21]. வள்ளிநாயகம். ஏ.பி., அடிமைகளின் தலைவர் அய்யன்காளி, ப. 171.

[22]. மேலது, ப. 118.

[23]. ஒளி & மரி., தலித் அடையாளத் தேடல், ப. 85.

[24]. மேலது, ப. 84.

[25]. பெருமாள்முருகன்., ஏறுவெயில், ப. 155.

[26]. பெருமாள்முருகன்., நிழல்முற்றம், பக். 40-41.

[27]. மேலது, ப. 97.

[28]. மேலது, ப. 103.

[29]. மேலது, ப. 93.

[30]. மேலது, ப. 76.

[31]. மேலது, ப. 114.

[32]. மேலது, பக். 110-111.

[33]. பெருமாள்முருகன்., பீக்கதைகள் சிறுகதைத் தொகுப்பு, ப. 40.

[34]. மேலது, ப. 117.

[35]. மேலது, பக். 61-62.

[36]. பெருமாள்முருகன்., நிழல்முற்றம், பக். 32-33.

[37]. பெருமாள்முருகன்., பீக்கதைகள் சிறுகதைத் தொகுப்பு, ப. 51.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.